(5) அறிவிப்பு.

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/74).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை (சட்ட பேரவை சட்ட முன் வடிவு எண் 5/74) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஈ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டல்) திருத்தச் சட்ட வரைவை (சட்டமன்றப் பேரவை சட்ட வரைவு எண் 5/1974) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டல்) சட்டத்தைச் சேர்ந்த 12 அல்லது 14வது பிரிவின் கீழ் உள்ள இறுதி விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உபரி நிலம், 18வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அரசால் அறிவிப்பு வெளியிடப்படுவதன் மேல் முற்றிலும் அரசிடமே நிலை பெற்றுள்ளது. தற்போது, 18 (1) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை மாற்ற அல்லது ரத்து செய்ய அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்கு சட்டத்தில் விதித்துறை எதுவும் இல்லை.

மேல் முறையீடு அல்லது மறு ஆய்வு மனுக்களின் மேல் எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவாக, அத்தகைய முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக 18 (1) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்ய அல்லது மாற்ற வேண்டிய நேர்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 12, 14வது பிரிவுகளின் கீழ் உள்ள இறுதி விவர அறிக்கையில் உண்மையெனத் தெரிகிற பிழைகளையும், எழுத்துப்

* 25—1—1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.